# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,490 – 1965 අගෝස්තු 27 වැනි සිකුරාදා – 1965.8.27.

14,490 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு ஒகத்து மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 451 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மானுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 449 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### 1961 ம் ஆண்டின் 13 ம் இலக்கப் பயிர் நட்ட உத்தரவாதச் சட்டம்

**பிரிவு 11 (1) ன் கீழ் கட்டளை**

1961 ம் ஆண்டின் 13 ம் இலக்கப் பயிர் நட்ட உத்தரவாதச் சட்டத்தின் பிரிவு 11 (1) ன் கீழ், விவசாய, உணவு அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஒகத்து 18 ந் திகதி.

எம். டி. பண்டா,
விவசாய, உணவு அமைச்சர்.

**கட்டளை**

பின்வருவன 1961 ம் ஆண்டின் 13 ம் இலக்கப் பயிர் நட்ட உத்தரவாதச் சட்டத்தின் பிரிவு 11 (1) ன் நோக்கங்களுக்கெனக் குறிக்கப்பட்ட காரணங்கள் ஆகும்.

1. போதிய நீரின்மை.
2. வரட்சி.
3. நீர்த்தேக்கம்.
4. வெள்ளப்பெருக்கு.
5. பயிர் நோய்.
6. பயிர்ப்பூச்சி தாக்குதல்.
7. காட்டுப்பன்றி.
8. காட்டு யானை.
9. ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட செய்கை முறைகளைக் கையாளுதல்.

8-884/1

## முக்கிய விளம்பரம்

*1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 9 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 4 ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*பேர்னுட் த சில்வா,*
*அரசாங்க அச்சகத் தலைவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
*1965 ம் ஆண்டு ஆவணி (ஒகத்து) மீ 20 ந் உ.*

## 1961 ம் ஆண்டின் 13 ம் இலக்கப் பயிர் நட்ட உத்தரவாதச் சட்டம்

### பிரிவு 12 (1) ன் கீழ் கட்டளை

1961 ம் ஆண்டின் 13 ம் இலக்கப் பயிர் நட்ட உத்தரவாதச் சட்டத்தின் பிரிவு 12 (1) ஆல் எனக்கு உரிமையாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் விவசாய, உணவு அமைச்சர் மொகட்டலாகே டிங்கிரி பண்டா ஆகிய நான் ஆறுவது பயிர் நட்ட உத்தரவாதத்தின தவணை 1965–66 பெரும்போக காலம் தொடங்கியதிலிருந்து ஒருவருட காலமாகும் என இக்கட்டளையின் மூலம் தீர்மானிக்கிறேன்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஓகத்து 18 ந் திகதி.

எம். டி. பண்டா,
விவசாய, உணவு அமைச்சர்.

8–884/2

---

## 1961 ம் ஆண்டின் 13 ம் இலக்கப் பயிர் நட்ட உத்தரவாதச் சட்டம்

### பிரிவு 24 (1) ன் கீழ் அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 13 ம் இலக்கப் பயிர் நட்ட உத்தரவாதச் சட்டத்தின் 24 (1) ம் பிரிவினால் எனக்கு உரிமையாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் விவசாய, உணவு அமைச்சர் மொகட்டலாகே டிங்கிரி பண்டா ஆகிய நான் 1965–66 பெரும்போக காலத்தினதும் 1966 சிறுபோக காலத்தினதும் நெற்பயிர் சம்பந்தமாக வழங்கப்படக்கூடிய நட்ட ஈட்டின் வீதம் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு அமையுமென இத்தால் தீர்மானிக்கிறேன்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் திகதி.

எம். டி. பண்டா,
விவசாய, உணவு அமைச்சர்.

### அட்டவணை

| பயிர் செய்கை நிலை | முழு அழிவு ஏற்பட்டால் வீதம் | அழிவின் அளவு நூற்று வீதம் | ஓரளவு அழிவு ஏற்பட்டால் வீதம் |
|---|---|---|---|
| திரும்பவும் விதைக்க அல்லது பயிரிட முடியாத அக்காலத்துக்கும் கதிர் வைக்கும் காலத்துக்கும் இடையில் அழிவு ஏற்படும்போது | ஆகக்கூடிய நட்ட ஈட்டுத் தொகையின் நூற்றுக்கு 70 வீதம் | முப்பதும் 30 க்குக் குறையவும் 30 க்கு மேல் | நட்ட ஈடு இல்லை அழிவு வீதத்தின்படி இந்நிலையில் முழு அழிவும் ஏற்பட்டால் கொடுக்கக் கூடிய நட்டஈட்டின் நூற்று வீதத் தொகை |
| கதிர் வைக்கும் காலத்துக்கும் அறுவடைக் காலத்துக்கும் இடையில் ஏற்படும்போது | ஆகக்கூடிய நட்ட ஈட்டுத் தொகையின் நூற்றுக்கு 100 வீதம் | முப்பதும் 30 க்குக் குறையவும் 30 க்கு மேல் | நட்ட ஈடு இல்லை அழிவு வீதத்தின்படி ஆகக்கூடிய நட்ட ஈட்டின் நூற்று வீதத் தொகை |

8–884/3

---

## சம்பளச் சபைச் சட்டம்

### அறிவித்தல்

மெத்தேதத்தும்பு, சிலிர்த்த தும்பு ஏற்றுமதித்தொழிற் சம்பளச் சபையில் நியமன அங்கத்தவராக இருந்த திரு. டபிள்யு. பீ. தொரகும்புர தாமாக விலகியதால் அவருக்குப்பதிலாக அங்கம் வகிக்க திரு. எம். எஸ். எம். பாவா என்பவரை, (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில், தொழில் வசதி, வீடமைப்பு மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டின் சம்பளச் சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ. ஓ. வீரசிங்க,
தொழில், தொழில் வசதி, வீடமைப்பு
மந்திரி காரியாலய நிரந்தரக்காரியதரிசி.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ந் தேதி.

8–956

---

## சம்பளச் சபைச் சட்டம்

### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 30 ம் பிரிவின் பிரகாரம் மதுவகை, வின்னாரித் தொழிற் சம்பளச் சபையால் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட தீர்மானங்கள் தொழில், தொழில் வசதி, வீடமைப்பு மந்திரியால் அங்கீகரிக்கப்பட்டு விட்டனவென்று அச்சட்டத்தின் 29 (3) ம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள் 1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 1 ந் தேதியன்று நடைமுறைக்கு வரும்.

ஏ. ஓ. வீரசிங்க,
தொழில், தொழில் வசதி, வீடமைப்பு
மந்திரி காரியாலய நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1965 ம் ஆ ஓகத்து மீ 23 ந் உ.

### அட்டவணை

வருடாந்த விடுமுறைகள் சம்பந்தமாக கள்ளு, சாராயம், வின்னாரித் தொழிற் சம்பளச் சபையால் ஆக்கப்பட்டு, 1947 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ந் திகதி வெளிவந்த 9,671 ம் இலக்க வர்த்தமானியிற் பிரசுரமான அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் குறித்த அட்டவணையின் இறுதியில் பின்வரும் புதிய தீர்மானங்களை இட்டு மாற்றப்படுகின்றன :—

" அரசாங்க விடுமுறைகள் (25 ம் பிரிவு)

9. (அ) இப்பந்தியினதும் 10 வது பந்தியினதும் ஏற்பாடுகளுக்கமைய, ஒவ்வொரு முதலாளியும் தம்மிடம் வேலை பார்க்கும் சகல வேலையாளருக்கும் (177 ம் அத்தியாயமாகிய) விடுமுறைச் சட்டத்தின் கருத்துக்கமைய பினவரும் அரசாங்க விடுமுறைகளை வேதனத்துடன் அனுமதித்தல் வேண்டும் :—

(1) தைப்பொங்கல் ;

(2) சுதந்திர ஞாபகார்த்ததினம் (பெப்ரவரி 4 ந் திகதி) ;

(3) சிங்கள-தமிழ் புது வருடப்பிறப்பு ;

(4) மே தினம் (மே மாதம் 1 ந் திகதி) ;

(5) சிங்கள விசாக மாதத்தின் பௌர்ணமி தினம் ;

(6) நபிகள் நாயகத்தின் பிறந்த தினம் ;

(7) நத்தார் தினம்.

(ஆ) இப்பந்தியின் (அ) ம் உப-பந்தியிற் குறிக்கப்பட்ட அரசாங்க விடுமுறையொன்று, ஒரு வேலையாளர், வேலை நிறுத்தம் செய்யும் காலம் ஒன்றில் நிகழுமாயின், அவ்வுபபந்தியின் ஏற்பாடுகள் அத்தகைய வேலையாளருக்கும் பொருந்தா.

(இ) முற்போந்த (அ) ம் உப-பந்தியிற் குறிக்கப்பட்ட ஒவ்வொரு விடுமுறைக்கும் ஒரு வேலையாளருக்கு கொடுபடவேண்டிய வேதனம் :—

(i) அவ்வேலையாளர் நேரவேலைக்குரிய கிழெல்லை நாளாந்தச் சம்பள விகிதத்தின்படி சம்பளம்பெற உரித்துடையரொருவராயின், ஒரு சாதாரண வேலை நாளுக்குக் கொடுபடவேண்டிய கிழெல்லைச் சம்பள விகிதத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

(ii) அவ்வேலையாளர் நேரவேலைக்குரிய ஓமெல்லை மாதாந்தரச்சம்பள விகிதத்தின்படி சம்பளம்பெற உரித்துடையரொருவராயின் (ஓமெல்லை மாதாந்தர விகிதத்தை 25ஆற் பிரிக்க வரும்) ஓமெல்லை நாளாந்தர விகிதத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

(iii) அவ்வேலையாளர் துண்டுவேலைக்குரிய ஓமெல்லைச் சம்பள விகிதத்தின்படி சம்பளம்பெற உரித்துடையரொருவராயின், இப் பந்தியின் (அ) ம் உப-பந்தியிற் குறிக்கப்பட்டுள்ள விடுமுறை நாள் ஒவ்வொன்றிற்கும், நேரடுத்து முந்திய 180 நாள் காலத்துள் அவ்வேலையாளர் சம்பாதித்த "போனஸ்" தவிர்ந்த மொத்தச் சம்பளத்தை (குறித்த காலத்துள்) அவர் உண்மையாக வேலைசெய்த நாட்களின தொகையாற் பிரிக்க வரும் சராசரி நாட்சம்பளத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

10. ஆயினும், முதலாளியொருவர், பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய 9 ம் பந்தியின் (அ) ம் உப-பந்தியிற் குறிக்கப்பட்டுள்ள அரசாங்க விடுமுறை நாள் எதிலும் வேலை கொடுக்கலாம் :—

(i) நேர வேலைக்குரிய ஓமெல்லைச் சம்பள விகிதத்தின்படி சம்பளம் பெற உரித்துடைய வேலையாளரொருவர் விடயத்தில் :—

(அ) அத்தகைய அரசாங்க விடுமுறை நாளுக்கு நேரடுத்து வரும் டிசெம்பர் மாதத்தின் முப்பத்தோராம நாளன்று அல்லது அதற்கு முன் ஒருநாள் விடுமுறை நாளாக, பதில் விடுமுறை நாள் கொடுக்கப்படும் மாதத்தில் ஒரு சாதாரண வேலை நாளுக்குக் கொடுபடவேண்டிய ஓமெல்லை நாளாந்தர மாதாந்தரச் சம்பளம் பெறும் வேலையாளர் ஒருவராயின், (ஓமெல்லை மாதாந்தரச் சம்பளத்தை 25ஆற் பிரிக்கவரும்) சம்பள வீதத்திற்குக், குறையாத வீதப்படியுள்ள வேதனத்துடன் அவ்வேலையாளருக்குக் கொடுக்கப்படவேண்டும் ; அல்லது

(ஆ) அத்தகைய அரசாங்க விடுமுறை நாளெதிலும், செய்யும் வேலைகு, சாதாரண வேலை நாள் கொண்ட மணித்தியாலங்களின் தொகையின்போது செய்யும் வேலைக்குரிய ஓமெல்லை நாளாந்தர சம்பள வீதத்தின் இரு மடங்கிற்குக் குறையாத வீதப்படியும், ஒரு சாதாரண வேலை நாட்கொண்ட மணித்தியாலங்களின் தொகைக்கு மேலதிகமாய்ச் செய்யும் வேலைகு, (ஓமெல்லை நாளாந்தர வீதத்தை 8 ஆலோ அல்லது ஓமெல்லை மாந்தர வீதத்தை 200 ஆலோ பிரிக்கவரும்) சாதாரண மணித்தியால வீதத்தின் மும்மடங்கிற்குக் குறையாத வீதப்படியும், (அத்தகைய மணித்தியாலத்தின் பாகத்திற் செய்யும் வேலைக்கு விகித சமபபடியும்) அவ்வேலையாளருக்கு வேதனம் கொடுக்கப்படவேண்டும்.

(ii) துண்டுவேலைக்குரிய ஓமெல்லைச் சம்பள விகிதத்தின்படி சம்பளம் பெற உரித்துடைய வேலையாளரொருவர் விடயத்தில :—

(அ) அத்தகைய அரசாங்க விடுமுறை நாளில் செய்யும்வேலைக்கு அவருக்குத் துண்டுவேலைக்குக் கொடுபடவேண்டிய ஓமெல்லைச் சம்பள விகிதத்திற்குக் குறையாத வீதப்படி வேதனம் கொடுபடவேண்டும், அத்துடன்

(ஆ) அத்தகைய அரசாங்க விடுமுறை நாளுக்கு நேரடுத்துப் பின்னர் வரும் டிசெம்பர் மாதத்தின முப்பந்தோராம் நாளன்று அல்லது அதற்கு முன் ஒரு நாள் விடுமுறை நாள், பதில் விடுமுறை கொடுக்கப்படும் நாளுக்கு நேரடுத்து முந்திய 180 நாட் காலத்துள், அவ்வேலையாளர் சம்பாதித்த ("போனஸ்" தவிர்ந்த) மொத்தச் சம்பளத்தை, (குறித்த காலத்துள்) அவர் உண்மையாக வேலைசெய்த நாட்களின் தொகையால் பிரிக்கவரும் சராசரிநாட் சம்பளத்திற்குக் குறையாத வேதனத்துடன் அவ்வேலையாளருக்குக் கொடுக்கப்படவேண்டும்."

8–1029

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## யாத்திரிகை விதிமுறை

### கொட்டபோவ எசல திருவிழா—1965

இக்கோயில் திருவிழாவுக்குச் சமூகம் கொடுக்கும் யாத்திரிகர்கட்கும் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்கட்கும் அறிவிப்பது யாதெனில் மேற் கூறிய ஆலயத் திருவிழா 1965 ம் ஆண்டு ஆவணி மாதம் 27 ம் தேதி ஆரம்பமாகி, 1965ம் ஆண்டு புரட்டாதி மாதம் 11 ம் தேதி முடிவடையும்.

1964 ம் ஆண்டு ஆடிமாதம் 24 ம் தேதி வெளிவந்த 14,117 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் விதிக்கப்பட்டிருக்கும் சட்டங்களை பொதுமக் களின் கவனத்துக்குக் கொண்டுவருகின்றேன்.

எம். ரி. டபிள்யு. அமரசேகர,
அரசாங்க மாவட்ட அதிபர்.

கச்சேரி,
மொனறுகலே.
1965 ம் ஆண்டு ஆவணி மீ 17 ந உ.

8–877

---

## யாத்திரிகை விதிமுறை

### கொக்கட்டிச்சோலே தான்தோன்றீஸ்பரன் கோவிற் திருவிழா—1965

இக்கோவில் திருவிழாவுக்குச் சமூகம் கொடுக்கும் யாத்திரிகர்கட்கும் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில், மேற்கூறிய ஆலயத் திருவிழா 1965 ம் ஆண்டு ஆவணி மாதம் 28 ந் திகதி ஆரம்பமாகி 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14 ந் திகதி முடிவடையும்.

இதில் பங்குபற்றும் யாத்திரிகர்கட்கும் மற்றும் இதில் சம்பந்தப்பட்டவர்கட்கும், 1952 ம் ஆண்டு யூலை மாதம் 18 ந் திகதி இல. 10,426 ஐக் கொண்ட அரசாங்க வர்த்தமானியின் விதிகள் ஆலயத் திருவிழா முடிவடையும் வரை அமுலில் இருக்கும்.

ஆர். ஜீ. ஜீ. ஒ. குணசேகரா,
பதில் அரசாங்க அதிபர், மட்டக்களப்பு மாவட்டம்.

மட்டக்களப்புக் கச்சேரி,
1965 ம் ஆண்டு ஆவணி மீ 1 ந உ.

8–836

---

## தோட்ட வீதிகளைப் பொது வீதிகளாக்கும் சட்டம்

### சட்ட நிருபணங்களின் 196 ம் அத்தியாயம்

கேகாலே மாவட்ட அரசாங்க அதிபர் ஹபுதந்திரிகே லீலரத்ன குணசேகர ஆகிய நான் தோட்ட வீதிகளைப் பொது வீதிகளாக்கும் சட்டத்து 2 ம் பிரிவின் பிரகாரம் எனக்கு அளித்த அதிகாரத்தின்படி இத்தால் பிரகடனப்படுத்துவது யாதெனில்—

(அ) 1. இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் "ஏபிசி" என்னும் மாதிரிப் படங்களைக்கொண்ட அட்டவணையின் பிரகாரம் ஹெமிங்போட் தோட்ட வீதி பொது வீதி ஆக்கப்படும்.

2. அப்படி குறிக்கப்பட்டிருக்கும் வீதியின் நடுப்பகுதியிலிருந்து இருபத்தைந்து அடி தூரமுள்ள காணி, அந்த வீதி பெரிதாக்கவோ, வேறுவகையில் அமைக்கவோ அல்லது வளைவு பாதை அமைக்கவோ ஒதுக்கப்பட்டிருக்கும்.

(ஆ) இக்கட்டளையால் பாதிக்கப்பட்ட உரித்தாளர் அல்லது உரித்தாளர்கள் இத் தோட்ட வீதியை பத்தி (அ) வில் கூறியபடி பாதுகாக்கும் பொறுப்பு அவர்களைச் சார்ந்ததாகும்.

லீல் குணசேகர,
கேகாலே மாவட்ட அரசாங்க அதிபர்.


கச்சேரி, கேகாலே.
1965 ம் ஆண்டு ஜூலை மீ 17 ந உ.

அட்டவணை

தோட்ட வீதி 3.242 கட்டை நீளமாக, ஹெமிங்போட் தோட்டத்தில் இருந்து பறகடுவ-வெவில்ல, டிக்கோவ பொது வீதியில் 2 ம் கட்டையில் பிரிந்துபோகும் வீதியாகிய பாதையும் அப்பாதை முடியும் இடம் ஹெமிங்போட் தோட்டத் தொழிற்சாலைக்குச் சமீபமாகும்.

# HEMINGFORD ESTATE ROAD

Scale:- 1 Inch to a mile




NOTE

PROPOSED ROAD SHOWN THUS +++ ABC

EXECUTIVE ENGINEER'S OFFICE
P.W.D. RATNAPURA
DATED: 17.10.61

E. E. Ratnapura.



இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.